සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இந்து தர்மாசிரியர் பரீட்சை - 2015 (2017)**

Hindu Dharmaciriyar Examination - 2015 (2017)

**(04) பன்னிரு திருமுறைகள்**

The Twelve Thirumurais

II ஆம், III ஆம் பகுதிகளுக்கான விடைகளை உமக்குத் தரப்படும் **விடைத்தாளில்** எழுதிப் **பகுதி I** இன் விடைத்தாளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்குக. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **இவ்விரண்டு** வினாக்களைத் தெரிவு செய்க.

## பகுதி II

**2.** "வளைக்கை மடநல்லார்" - திருமயிலைப் பதிகம்
   (i) விளக்கீடு குறித்த இப்பாடலை வரியமைப்புடன் எழுதுக.
   (ii) பாடலைப் பாடியவர் - தலம் - பண் என்பனவற்றைக் குறிப்பிடுக.
   (iii) கார்த்திகை தீபத்திருநாள் சிறப்பு பற்றி எழுதுக.
   (iv) "மட்டிட்ட புன்னை" பதிகம் தோன்றிய வரலாற்றைச் சுருக்கிக் கூறுக.

(20 புள்ளிகள்)

**3.** "நீளநினைந்தடியேன்" - சுந்தரர் ஏழாம் திருமுறை
   (i) பாடலை எழுதிப் பொருள் தருக.
   (ii) பாடல் பாடப்பெற்றதற்கான காரணத்தை சுருக்கமாகத் தருக.
   (iii) சுந்தரரின் இருமனைவியர் பெயர்களையும், அவர்களது பூர்வஜென்மப் பெயர்களையும் குறிப்பிடுக.
   (iv) சுந்தரர் மண்ணுலகில் பிறக்கக் காரணம் என்ன?

(20 புள்ளிகள்)

**4.** "சொற்றுணை வேதியன்" - திருநாவுக்கரசர்
   (i) இப்பதிகத்தின் சிறப்புப் பெயர் யாது? பண் யாது?
   (ii) பஞ்சாட்சர மந்திரத்தை எழுதுக.
   (iii) சூக்கும பஞ்சாட்சரம் அமைந்த திருவாசகப் பாடலை எழுதுக.
   (iv) மேற்கூறிய திருப்பதிகம் பாடப்பெற்ற சந்தர்ப்பத்தைச் சுருக்கமாக எழுதுக.

(20 புள்ளிகள்)

**5.** "ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்" - திருப்பல்லாண்டு
   (i) இப்பாடல் குறித்து நிற்கும் திருவிழா - விழாநாயகன், நாயகனின் நட்சத்திரம் பற்றிக் குறிப்பிடுக.
   (ii) தில்லையில் இத்திருவிழாக் காண வந்த தேவர்கள் யாவர்?
   (iii) திருப்பல்லாண்டில் உள்ள பாடல்கள் எத்தனை? திருப்பல்லாண்டு பாடியவேளையில் தில்லையில் நடந்த அதிசயம் என்ன?
   (iv) பல்லாண்டு பாடிய சைவ - வைணவ அடியார்கள் யாவர்?

(20 புள்ளிகள்)

## பகுதி III

**6.** திருமுருகாற்றுப்படை காட்டும் சீரலைவாய்ச் சிறப்புப் பற்றிக் கூறுக. (20 புள்ளிகள்)

**7.** பக்தியின் உச்சத்தைத் தொட்ட சிறுத்தொண்டர் செயல் பற்றி ஆராய்க. (20 புள்ளிகள்)

**8.** தேவாரப் பண்ணிசையில் இராஜராஜனின் வகிபாகம் எத்தகையது? (20 புள்ளிகள்)

**9.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்கு** சிறுகுறிப்பு எழுதுக.
   (i) சேரமான் பெருமாள்
   (ii) விறன் மிண்டர்
   (iii) சாக்கிய நாயனார்
   (iv) கலய நாயனார்
   (v) ஏனாதி நாயனார்

(20 புள்ளிகள்)

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இந்து தர்மாசிரியர் பரீட்சை - 2015 (2017)
Hindu Dharmaciriyar Examiantion - 2015 (2017)

(05) கோயில்களும் கலைகளும்
The Art and Architecture of the Hindu Temple

இப்பகுதிகளுக்கான விடைகளை உமக்குத் தரப்படும் **விடைத்தாளில்** எழுதிப் பகுதி I இன் விடைத்தாளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.
ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **இவ்விரண்டு** வினாக்களைத் தெரிவு செய்க.

## பகுதி II

**2.** திராவிடக் கட்டடக் கலையின் வளர்ச்சியில் மேல்வரும் அமைப்புகள் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.
- (i) அதிஷ்டானம் *(06 புள்ளிகள்)*
- (ii) விமானம் *(07 புள்ளிகள்)*
- (iii) கோபுரம் *(07 புள்ளிகள்)*

**3.** மேல்வரும் கடவுட் படிமங்களின் அம்சங்களைச் சுருக்கமாக விளக்குக.
- (i) அர்த்தநாரி *(06 புள்ளிகள்)*
- (ii) திரிபுராந்தகர் *(04 புள்ளிகள்)*
- (iii) காலாரி *(04 புள்ளிகள்)*
- (iv) கணபதி *(06 புள்ளிகள்)*

**4.** மேல்வருவனவற்றின் சிறப்புகளைச் சுருக்கமாக விளக்குக.
- (i) அஜந்தா ஓவியங்கள் *(10 புள்ளிகள்)*
- (ii) தஞ்சைப் பெருங்கோயில் ஓவியங்கள் *(05 புள்ளிகள்)*
- (iii) சித்தன்னவாசல் ஓவியங்கள் *(05 புள்ளிகள்)*

**5.** பரதநாட்டியத்தில் மேல்வருவனவற்றின் முக்கியத்துவத்தை விளக்குக.
- (i) அபிநயம் *(10 புள்ளிகள்)*
- (ii) தாளம், இராகம் *(06 புள்ளிகள்)*
- (iii) பாதசாரிகள் *(04 புள்ளிகள்)*

## பகுதி III

**6.** விஜயநகர - நாயக்கர் காலத்துக் கோயிற் கட்டடக் கலையின் சிறப்பான பண்புகளை விளக்குக. *(20 புள்ளிகள்)*

**7.** புராதன கால இந்திய சமுதாயத்தில் ஓவியங்களை வரையும் முறைகளையும் அவற்றின் பயன்பாடுகளையும் ஆராய்க. *(20 புள்ளிகள்)*

**8.** "பரதநாட்டிய சாஸ்திரம் இந்திய நுண்கலைக் கோட்பாடுகளின் களஞ்சியமாகும்." இக்கூற்றினை ஆராய்க. *(20 புள்ளிகள்)*

**9.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **நான்கினைப்** பற்றிச் சுருக்கமான குறிப்புகள் எழுதுக.
- (i) ஐஹொளே
- (ii) பல்லவர் காலச் சிற்பங்கள்
- (iii) திரிபுவன வீரேஸ்வரம்
- (iv) மகரிகள்
- (v) குச்சுப்புடி நடனம்
- (vi) ராசபுத்திரர் ஓவியங்கள்
- (vii) ஐந்தாம் சிவாலயம் - பொலன்நறுவை
- (viii) சண்டேஸ்வரர் படிமங்கள்

*(05 × 04 = 20 புள்ளிகள்)*

* * *